## 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை ஸ்ரேட் டிரேடிங் (ஜெனரல்) கோர்ப்பரேசன் லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

-----------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பனியின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்வதற்காக இருந்த போதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள்

பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 82 ஆம் பிரிவிற்கேற்ப ரூபா 15,955,597 ஆன வங்கிச் கட்டணங்கள் விரிவான வருமானக் கூற்றில் தனியான வகையொன்றின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது தனியாக நிதிச் செலவின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை | இது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க வெளிப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 4 ஆம் பந்தியின் படி புலனாகாத சொத்துக்களின் கீழ் | | |

| | | |
|---|---|---|
| காட்டப்படவேண்டிய மென் முறைமையினது பெறுமதி ரூபா 833,333 ஆதனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எடுக்கப்படும்<br>ஏதிர்வரும் வருடத்தில் அச் செலவுகள் உரிய முறையில் வேறாக காட்டப்படும் | இது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க வெளிப்படுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் பழுதடைந்த மற்றும் காலாவதியான இருப்புக்களின் பெறுமதி ரூபா 12,803,353 ஆக காணப்பட்ட போதிலும் இறுதி இருப்புக்களில் இருந்து ரூபா 12,248,760 மாத்திரம் குறைத்து காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 554,593 இருப்பின் பெறுமதி அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியான பெறுமதியினை கணக்கில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வரிவிலக்களிக்கப்பட்ட விற்பனைசாலையில் சேதமடைந்த இருப்பின் பெறுமதி ரூபா 1,463,064 இருப்பில் இருந்து கழிக்கப்படவில்லை இதனால் இருப்பின் பெறுமதி ரூபா 1,463,064 மிகையாக காணப்பட்டது. | சுங்கத் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்று சேதமடைந்த இருப்பின் பெறுமதியினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | சேதமடைந்த இருப்பின் பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2015 ஆம் ஆண்டு கொள்வனவு செய்து திருப்பி அனுப்பப்பட்ட தளபாடங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 632,000 முற்பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. | உரிய தொகையினை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) தெரிவு செய்யப்பட்ட 15 கடன்பட்டோருக் இடையே ரூபா 17,619,666 ஆன இரண்டு கடன்பட்டோர் மீதிக்கான மீதி உறுதிப்படுத்தல் கிடைத்திருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 4,865,764 வேறுபாடு காணப்பட்டது. | கடன்பட்டோரால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகள் பேரேட்டு மீதியுடன் கடன்பட்டோர் மீதிகளை இணக்கம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | ஒப்பிடப்பட்டு மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கடந்த 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையாக உள்ள 06 வியாபார மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 3,890,578 மற்றும் 4 வருடங்களுக்கு மேலாக நிலுவையான 02 வியாபார மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 15,037,538 ஐ தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் அடுத்தவருடத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் சீர் செய்வதற்கு முகாமையினால் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தவேண்டிய மீதியிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) ரூபா 7,580,370 ஆன கடன்பட்டோர் மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் காட்டப்பட்டுள்ளதனால் நிதிக் | முகாமையின் கருத்துரை கிடைக்கப்பெறவில்லை. | இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி ரூபா 7,580,370 குறைத்து காட்டப்பட்டுள்ளது. | | |
| (இ) மாதிரியொன்றாக ரூபா 43,946,775 பெறுமதியுடைய 71 கடன்கொடுத்தோர் மீதிகளுக்கு இடையே உறுதிப்படுத்தல் கோரியிருந்த போதிலும் 13 கடன்கொடுத்தோர் மீதிகளுக்கான கிடைத்திருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளின் தொகைக்கு இடையே ரூபா 21,061,607 ஆன வேறுபாடு காணப்பட்டது. | கடன்கொடுத்தோரால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி மற்றும் பேரேட்டு கணக்கு மீதிகளுக்கும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | சீராக்கப்பட்டு மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களை. மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 !ன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>(I) 5.1.3 ஆம் பிரிவு | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும், வருடாந்த வரைபு மதிப்பிடும் தயாரித்து பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நிரல் அமைச்சிற்கும் திறைசேரிக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலப்பகுதியில் பணிப்பாளர்சபை காணப்படாமையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டினை அங்கீகரிக்க முடியாதிருந்தது. ஏதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்று நிரூபத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (II) 9.3.1 ஆம் பிரிவு 01ம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் பொது முயற்சிகளுக்காக முறையாக தயாரிக்கப்பட்டு | ஆட்சேர்ப்பு நடைமுறை திட்டத்தின் ஒரு பகுதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறையொன்று இருக்க வேண்டிய போதிலும் உயர் முகாமைத்துவம் தவிர்ந்த ஏனைய பதவியணியினர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று முகாமைத்துவ சேவைத்திணைக்களத்திடமிருந்து அங்கிகரித்துக் கொள்ளப்படாததாக இருந்ததுடன், முறையான நடைமுறையொன்று இல்லாமல் பதவியணியினர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எஞ்சிய பகுதி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை அதனால் முறையாக ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை. | ஆடசேர்ப்பு முறையாக நடைபெறவேண்டும். |
| (III) 9.10 பிரிவு | சுற்றிக்கையின் பிரகாரம் ஒப்பந்த மற்றும் அமைய அல்லது வேறுவகையில் ஆட்சேர்ப்புக்கான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஒப்பந்தம் மற்றும் அமைய டிெப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன்இ மீளாய்வாண்டில் அப் பதவியினருக்கு செலுத்தப்பட்டுள்ள சம்பளமும் படியுமாக முறையே ரூபா 46,460,747 மற்றும் ரூபா 11,060,030 செலுத்தப்பட்டுள்ளது. | திறந்துவைக்கப்பட்டுள்ள காட்சியகங்களின் நடவடிக்கைகளை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். | ஆட்சேர்ப்பு நடவடிக்கை திறைசேரியினால் அங்கீகாரத்தினை பெற்று நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) 2015 !ன் 16 ஆந் திகதிய பீஈடீ/03 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 2.1 மற்றும் 2.8 ஆம் பிரிவு | சுற்றிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய படிகளுக்கு மேலதிகமாக தலைவருக்கும் செயற்பாட்டு பணிப்பாளருக்கும் முறையே ரூபா 100,000 வீதம் 1,079,333 வும் ரூபா 40,000 வீதம் ரூபா 465,332 வீதமும் பொழுது போக்கு படியாக | பணிப்பாளர்சபையின் தீர்மானத்திற்கமைய இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏதிர்வரும் காலங்களில் உரிய அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டுள்ளதுடன் | | |
| (இ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 02 ஆம் பிரிவு | அதற்கான வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாடும் பெற்றிருக்கவில்லை சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற் இணங்க வருடாந்த விளம்பர திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்று விளம்பர செலவை மேற்கொள்ளல் வேண்டும். ஆங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது விளம்பர செலவினமாக ரூபா 1,865,814 செலுத்தப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் ஏதிர்காலத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

----------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் மீளாய்வாண்டின வரிக்குப் பின்னர் செயற்பாட்டு விளைவுகள் நட்டம் ரூபா 27,040,732 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 68,658,203 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளால் ரூபா 95,698,935 ஆன வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளதனை அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு வரிவிலக்களிக்கப்பபட்ட விற்பனைகளில் ஏற்பட்டுள்ள குறைவு பிரதான காரணமாக இருந்தது. மது விற்பனை குறைவடைவதற்கு வரிவிலக்களிக்கப்பட்ட மதுவிற்பனை தொடர்பாக அரசினால் பிறப்பிக்கப்பட்ட புதிய சட்டம் காரணமாகவுள்ளது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 !ன் 02ந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கம்பனியின் பதவியணியில் உள்ள 3 உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சுக்கு இணைக்கப்பட்டு அவர்களுக்கு சம்பளமும் படியுமாக ரூபா 709,800 செலுத்தப்பட்டிருந்தது. | இப் பதவியணி ஊடக உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தில் தற்போது ஊடக பரிவு இல்லாததால் இவர்கள் வரிசை அமைச்சில் ஊடக பிரிவில் இணைக்கப்பட்டு நிறுவனத்தின் ஊடக நடவடிக்கைகளை செயற்படுத்துகின்றார்கள். இவர்களில் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் ஏனைய இரண்டு பேரும் சேவையில் இருந்து விலகியுள்ளனர். | அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் செலுத்தியுள்ள பணத்தினை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 329 இருந்த போதும். உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 405 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 223 ஊழியர்கள் மிகையாகவும் 147 ஊழியர்கள் பற்றாக்குறையாகவும் காணப்பட்டது. அப் பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளுக்குரிய 113 ம் அங்கீகரிக்கப்படாத 36 பதவிகளுக்கு 110 ஆக இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்குரியதாக 147 பற்றாக்குறையாக இருந்தது. | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு எவ்விதமான ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். |
| | குறித்த உத்தியோகத்தர் ஆரம்பத்தில் சாய்நதமருது கிளையின் விற்பனை ஒருங்கிணைப்பாளராக தற்காலிகமாக நியமனம் பெற்று பின்னர் ஒப்பந்த அடிப்படையில் உதவி | அங்கீபரிக்கப்பட்ட பதவினளுக்கு தகுதிவாய்ந்த நபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். |
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியினுள் | முகாமையாளராக நியமனம் | |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்கப்படாத பதவியாகிய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் மற்றும் அமைச்சின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஆகிய இரு பதவிகளுக்கு ஒரு நபர் நியமிக்கபட்டிருந்ததோடு அவரது சுயவிபரக் கோவையினை பரிசீலனை செய்த போது இதற்கு பொருத்தமாக தகமைகள் காணப்படாமல் இருந்தது. குறிப்பிட்ட நிதியாண்டின் போது இவருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,095,753 செலுத்தப்பட்டுள்ளது. | பெற்றதற்கினங்ப கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு ஒருங்கிணைப்பாளராக நியமித்தன் பின்னர் அதற்குரிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டது. இவர் 2019 மே 31 ஆந் திகதியுடன் கம்பனியில் இருந்து விலகிக் கொண்டார். | |
| (இ) | 2014ம் ஆண்டில் விற்பனை நிறைவேற்றுனராக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் உரிய நடைமுறைக்கு புறம்பாக ஒருங்கிணைப்பாளர், உதவி முகாமையாளர் பதில் உதவி முகாமையாளர் போன்ற பல்வேறு பதவிகளுக்கு அவ்வப்போது நியமிக்கப்பட்டு திறைசேரியின் அனுமதியின்றி படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஆதன் பிரகாரம் சம்பளமும் படியுமாக மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 939,600 செலுத்தப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு சந்தர்ப்பத்தின் போது வரைவு ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று காணப்படாதிருந்ததால் விற்பனை சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். சேவை தேவைபாட்டின் அடிப்படையில் பல்வேறு பகுதிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் நிரந்தர உதவி முகாமையாளர் பதவிக்குரிய படிகள் மற்றும் அதற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கடமைகளுக்காக கூட்டிணைப்பு படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக தகமையான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கும் திறைசேரியின் அனுமதியுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |